பாடம் : தமிழ்மொழி

ஆண்டு : 4

நடவடிக்கை : தனிப்படத்திற்கு 80 சொற்களில் கட்டுரை எழுதுக.




| | |
|---|---|
| "மணி சீக்கிரம்.. என்றவாறு நண்பனை இழுத்துக் கொண்டு தண்ணீருக்குள் பாய்ந்தான் நிலவன். அதே சமயம், " ஐயோ! இவர்களை அடிக்க கல்லை எறிந்தோம். தவறுதலாக குளவிக்கூட்டில் பட்டுவிட்டதே! என்று தலைத்தெறிக்க ஓடினான் கவின். | |
| தூரத்தில் அவர்களின் அண்டை வீட்டில் வசிக்கும் கவின் தலைதெறிக்க ஓடுவதைப் பார்த்த மணி, நிலவா! அங்கே கவின் ஓடுகிறான் பார்! நம்மைப் பழிவாங்க அவன் செய்த காரியமாகத்தான் இருக்கும் என்றான். | |
| அப்பாடா இன்னைக்காவது ஒரு மீன் கிடைத்ததே! மகிழ்ச்சியால் முகம் பிரகாசித்தது. "இதை அப்படியே ஒண்டியா வாழ்கிற அந்தத் தாத்தாகிட்ட கொடுத்திடணும்" மணியின் சிந்தனையைக் கலைத்தது திடீரென ஒலித்த "ஓடுங்க!ஓடுங்க!" என்ற குரல். திரும்பிப் பார்ப்பதற்குள் அன்பன் "மணீ! டேய்! கு...கு...குளவி!! நம்மல கொட்டறதுக்குள்ள ஆத்துல குதிச்சிடுவோம் வா!!! | |
| பேச்சு சத்தம் கேட்டால் மீன் வராதே! திடீரென மணி பிடித்திருந்த தூண்டில் ஆடியது. ஆம்! பெரிய மீன் மாட்டிக்கொண்டு துள்ளியது. | |
| ஆற்றோரமாக ஒரு குடிசையில் வாழும் தாத்தாவின் குரல்தான் அது. ஒவ்வொரு முறையும் மணியும் நிலவனும் தாத்தாவின் குடிசையைக் கடக்கும் போது தாத்தா கூறும் வழக்கமான அறிவுரை. | |
| அந்தத் தாத்தாவுக்கு யாரும் இல்லையோ? பார்க்கும் போதெல்லாம் தனியாத்தான் இருக்கார். கேள்வி கேட்ட நண்பனை அமைதியாய் இருக்கச் சொன்னான் மணி. | |
| "என்ன பசங்களா? வழக்கம் போல மீன் பிடிக்கக் கிளம்பிட்டீங்க போலருக்கு. இருட்டுறதுகுள்ள திரும்பிடுங்க." | |
| "ஐயோ! மணி! அந்தத் தாத்தா உடம்புல சட்டை கூட இருக்காதே! குளவிக்கிட்ட இருந்து அவரை முதல்ல காப்பாற்றனும்" என்றவாறு குடிசையை நோக்கி ஓட ஆரம்பித்தான். | |
| நண்பனை இழுத்துக் கொண்டு ஆற்றில் குதித்தான் நிலவன். கையில் இருந்த தூண்டில் நழுவி ஆற்றில் விழுந்தது. | |
| அதை ஆமோதித்த நிலவனுக்கு ஆற்றோர குடிசையில் வாழும் தாத்தா நினைவுக்கு வந்தார். | |

1 2 3 4 5 6 7 8 9 10

LIVEWORKSHEETS